பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

09 02 2025 **SUNDAY** 12 40 **PM**

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- சரக்கு மற்றும் சேவை வரி விகிதங்களை குறைப்பது குறித்து ஜிஎஸ்டி கவுன்சில் விரைவில் முடிவெடுக்கும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.
- படைப்பாற்றலுக்கான சக்திமிக்க மையமாக இந்தியா உருவெடுக்கும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
- உலகிற்கே உணவளிக்கும் வகையில் வேளாண் துறையை மேம்படுத்துவதற்கான சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.
- தில்லி சட்டப்பேரவை கலைக்கப்படுவதாக துணைநிலை ஆளுநர் திரு. வினெய்குமார் சக்ஷேனா அறிவித்துள்ளார்.
- மும்பை ஓப்பன் டென்னிஸ் போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் பிரார்த்தனா தோம்பரே – டச்சு நாட்டின் **Arianne Hartono** இணை இன்று ரஷ்ய இணையை எதிர்கொள்கிறது.

**<<<<<<<>>>>>>>>**

சரக்கு மற்றும் சேவை வரி விகிதங்களை குறைப்பது குறித்து ஜிஎஸ்டி கவுன்சில் விரைவில் முடிவெடுக்கும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களிடம் பேசிய அவர், சரக்கு மற்றும் சேவை வரி விகிதங்களை எளிமைப்படுத்துவதற்கான நடைமுறைகள் நிறைவடையும் தருவாயில் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

சாமானிய மக்கள் பயனடையும் வகையில், அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களுக்கான ஜிஎஸ்டி வரி விகிதத்தை நிர்ணயிப்பதில் ஜிஎஸ்டி கவுன்சில் உறுப்பினர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

வருமான வரி சட்டத்தில் உள்ள பழைய வரி விகிதங்களை ரத்து செய்யும் திட்டம் எதுவும் இல்லை என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

மூலதன செலவினங்கள், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 புள்ளி மூன்று சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

சரக்கு மற்றும் சேவை வரி தற்போது 4 அடுக்குகளை கொண்டுள்ள வரி அமைப்பாக உள்ளது என்று கூறினார், இந்த வரி அடுக்குகளில் தேவையான மாற்றங்களை கொண்டு வருவதற்கு உறுப்பினர்கள் பரிந்துரைகளை வழங்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை இரட்டை இலக்கத்தை எட்டும் வகையில், மத்திய அரசு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறினார்.

<<<<<<<>>>>>>>

புத்தகம் வாசிக்கும் பழக்கம் சிந்தனையை வளர்க்க உதவிடும் என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற உலக புத்தக கண்காட்சியில் இரண்டு புத்தகங்களை அவர் அறிமுகப்படுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், சமூக வளர்ச்சிக்கு புத்தகங்கள் சிறந்த வழிகாட்டியாக உள்ளது என்று தெரிவித்தார்.

சவால்களை எதிர்கொள்வதற்கான உத்வேகம் மற்றும் மனவலிமையை புத்தகங்கள் வழங்குவதாக அவர் கூறினார்.

மாணவர்கள் தங்களது திறனை வளர்த்துக் கொள்ள புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று திரு. ஓம் பிர்லா தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

படைப்பாற்றலுக்கான சக்திமிக்க மையமாக இந்தியாவை உருவெடுக்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், வேவ்ஸ் உச்சி மாநாடு இந்த இலக்கை அடைய உதவிடும் என்று தெரிவித்துள்ளார்.

முன்னெப்போதும் இல்லாத வகையில் இந்த உச்சிமாநாட்டில் உலகின் தலைசிறந்த ஊடகங்களின் தலைமைச் செயலாளர்கள், பொழுதுபோக்கு துறை சார்ந்த பிரபலங்கள், படைப்பாற்றல் சிந்தனை கொண்ட நபர்கள் பங்கேற்றுள்ளது குறிப்பிடத்தக்கது என்று அமைச்சர் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

நாட்டின் முன்னேற்றத்திற்கு வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சி அவசியம் என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர், வரி பங்களிப்பிற்கு ஏற்ப மத்திய அரசிடமிருந்து மாநிலங்கள் நிதி கோருவது ஏற்புடையதல்ல என்று கூறினார்.

பீகார், மேற்குவங்கம், ஒடிசா, ஜார்க்கண்ட் உள்ளிட்ட எட்டு மாநிலங்களின் வளர்ச்சியில் மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

மத்திய அரசின் திறன் மேம்பாடு உள்ளிட்ட நடவடிக்கைகள் காரணமாக வேலைவாய்ப்புகள் அதிகரித்துள்ளதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம், காந்திநகரில் முதலாவது பிம்ஸ்டெக் இளையோர் உச்சிமாநாட்டை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இளைஞர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையில் உலகின் மூன்றாவது நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் தொழில் முனைவு, நவீன தொழில்நுட்பங்கள், டிஜிட்டல் பயன்பாடு, நீடித்த வளர்ச்சி, எல்லைகளை கடந்த நல்லுறவுகளை உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்படவுள்ளது.

<<<<<<<>>>>>>>>

செமி கண்டக்டர் துறையில் இந்தியா முன்னணி நாடாக உருவெடுத்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

செமி கண்டக்டர் சந்தை 2030ஆம் ஆண்டுக்குள் 103 புள்ளி நான்கு பில்லியன் டாலர் அளவிற்கு வளர்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக இந்திய மின்னணுவியல் மற்றும் செமிகண்டக்டர் சங்கம் தெரிவித்துள்ளது.

நடப்பாண்டில் செமிகண்டக்டர் வர்த்தகம் 52 பில்லியன் டாலராக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக அச்சங்கம் கூறியுள்ளது.

மத்திய அரசின் உற்பத்தியுடன் கூடிய ஊக்கத்தொகை திட்டம், ஆராய்ச்சிப் பணிகளுக்கான முதலீடுகள் உள்ளிட்ட நடவடிக்கைகள் மூலம் செமிகண்டக்டர் உற்பத்தி அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>>

உலகிற்கே உணவளிக்கும் வகையில் வேளாண் துறையை மேம்படுத்துவதற்கான சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்

புதுச்சேரியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அடுத்த 25 ஆண்டுகளுக்கான வளர்ச்சியை கருத்தில் கொண்டு பட்ஜெட் உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் ஆராய்ச்சி படிப்பில் கவனம் செலுத்தும் வகையில் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

புத்தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில், மத்திய பட்ஜெட்டில் 10 ஆயிரம் கோடி ரூபாய் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

சுற்றுலாவை மேம்படுத்த 50 நகரங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் இதில் **Home stay** திட்டம் கொண்டுவரப்படவுள்ளதாகவும் திரு. எல். முருகன் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

பயிர்க்கடன், நகைக்கடன் தள்ளுபடி போன்ற தேர்தல் வாக்குறுதிகளை திமுக தலைமையிலான மாநில அரசு நிறைவேற்ற தவறிவிட்டதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு. அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள வாக்குறுதிகள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஆண்டுதோறும் பருவமழை காலங்களில் சென்னை உள்ளிட்ட மாவட்டங்கள் பாதிப்புக்கு உள்ளாவதை தடுக்கும் வகையில் நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

பேரிடர் நிவாரண நிதியை மத்திய அரசு வழங்கவில்லை என்ற மாநில அரசின் குற்றச்சாட்டு தவறானது என்று திரு. அண்ணாமலை குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>>

தில்லி சட்டப்பேரவை கலைக்கப்படுவதாக துணைநிலை ஆளுநர் திரு. வினெய்குமார் சக்ஷேனா அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், புதிய அரசு ஆட்சியமைக்கும் வகையில் ஏழாவது சட்டப்பேரவை கலைக்கப்படுவதாக தெரிவித்துள்ளார்.

முன்னதாக, தில்லி முதலமைச்சர் திருமதி. அதிஷி தனது ராஜினாமா கடிதத்தை துணைநிலை ஆளுநரிடம் சமர்ப்பித்தார்.

<<<<<<<>>>>>>>

மூன்றாவது காசி தமிழ் சங்கமம் நடைபெறவுள்ளதை ஒட்டி, பள்ளி மாணவர்கள் பங்கேற்ற வாக்கத்தான் நிகழ்ச்சி சென்னையில் இன்று நடைபெற்றது.

இதில் நூற்றுக்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் அகஸ்திய முனிவர் போல் வேடமணிந்து பங்கேற்றனர்.

4ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரையிலான மாணவர்கள் பங்கேற்ற பேரணி, சென்னை தியாகராயநகரில் உள்ள இந்தி பிரச்சார சபாவில் தொடங்கி, அகஸ்தியர் ஆசிரமத்தில் நிறைவடைந்தது.

இந்த நிகழ்ச்சியை மத்திய செந்தமிழ் கல்வி நிறுவனம் மற்றும் சாஸ்த்ரா நிகர்நிலை பல்கலைக் கழகம் ஏற்பாடு செய்திருந்தன.

<<<<<<<>>>>>>>

ஜம்மு காஷ்மீரின் ரஜோரி மாவட்டத்தில் எல்லையை ஒட்டிய **Keri** பகுதியில் தீவிரவாதிகளின் ஊடுருவல் முயற்சியை பாதுகாப்புப் படையினர் முறியடித்துள்ளனர்.

இப்பகுதியில் தீவிரவாதிகள் ஊடுருவ முயற்சிப்பதாக கிடைத்த தகவலின் பேரில் பாதுகாப்புப் படையினர் அப்பகுதியில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

அப்போது, ஊடுருவ முயன்ற தீவிரவாதிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மேலும் இப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வருவதாகவும், அதிக எண்ணிக்கையிலான வீரர்கள் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

<<<<<<<>>>>>>>

இந்தியா - இங்கிலாந்து இடையேயான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

கட்டாக்கில் இப்போட்டி பிற்பகல் மணி 1.30க்கு தொடங்குகிறது.

<<<<<<<>>>>>>>

நாக்பூரில் நடைபெற்று வரும் ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் தமிழக அணிக்கு எதிரான காலிறுதி ஆட்டத்தில் இரண்டாவது நாளான இன்று விதர்பா அணி முதல் இன்னிங்ஸில் 353 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

<<<<<<<>>>>>>>

மும்பை ஓப்பன் டென்னிஸ் போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் பிரார்த்தனா தோம்பரே – டச்சு நாட்டின் **Arianne Hartono** இணை ரஷ்ய இணையை இன்று எதிர்கொள்கிறது.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் மாயா ராஜேஸ்வரன் தோல்வியடைந்தார்.

<<<<<<<>>>>>>>

துனிஷீயாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இன்று நடைபெறும் இறுதியாட்டத்தில் இந்தியாவின் **Manas Dhamne -** இத்தாலியின் **Lorenzo Carboni-**யை எதிர்கொள்கிறார்.

<<<<<<<>>>>>>>

புரோ ஹாக்கி லீக் போட்டிகள் இம்மாதம் 15ஆம் தேதி தொடங்குகிறது.

இப்போட்டியில் பங்கேற்கும் இங்கிலாந்து மகளிர் அணி, புவனேஷ்வர் வந்தடைந்தது.

<<<<<<<>>>>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் பெங்களூரு அணி - ஜம்ஷெட்பூர் அணியை எதிர்கொள்கிறது.

<<<<<<<<>>>>>>>>